**காரைநகர் பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காரைநகர் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காரைநகர் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டில் சபையினால் ரூபா 585,820 வீதி விளக்கு பொருத்துதல் தொடர்பான பொருட்கள் இவ்வறிக்கை திகதி வரை கொள்வனவு செய்யப்பட்டிராத போதும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் சென்மதியாக உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் ஐந்தொகைகளில் ரூபா 585,820 நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்தும் திரண்டநிதி குறைத்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | உலகளாவிய ரீதியில் நிலவிய COVID-19 தொற்றுக்காரணமாக சந்தையில் பொருட்கிடைப்பனவில் ஏற்பட்ட தட்டுப்பாடுகள் மற்றும் காலதாமதங்கள் காரணமாகவும் யாழ்மாவட்ட பிரதேசத்தில் உள்ள வழங்குனர்களிடம் போதிய கையிருப்பு இன்மையால் 2020ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டு வேலை என்பதனால் கேள்விகோரல் அடிப்படையில் சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. | கணக்குகளில் சொத்துக்களின் பெறுமதி சரியாக வெளிப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதுடன் குறித்த குறைபாடுகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான ரூபா 75,000 பெறுமதியான பாலாவோடை அந்தியேட்டி கிரியை மண்டபம் அமைத்துள்ள காணி கணக்கில் காட்டப்பட்டிருக்காமையினால் ஐந்தொகையில் ரூபா 75,000 நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பாலாவோடை அந்தியேட்டி கிரியை மண்டபம் அமைத்தலுக்காக அன்பளிப்பாக பெறப்பட்ட காணி பெறுமதி ரூபா 75000.00 ஆனது தவறுதலாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. 2022 ஆம் ஆண்டுகான கணக்குகளில் இதன் பெறுமதி சேர்த்துக்கொள்ளப்படும். | கணக்குகளில் சொத்துக்களின் பெறுமதி சரியாக வெளிப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதுடன் குறித்த குறைபாடுகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான 19 காணி கட்டடங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக் காமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான 19 காணி கட்டடங்களுக்கு உறுதிகள் உள்ள போதும் நில அளவைப்படம் இல்லை. பெறுமதி மதிப்பிடலுக்கு விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு இவ்விடயம் மையப்படுத்துவதற்கு நிலஅளவைப்படம் அவசியமாக உள்ளது. எனவே இவ் 19 ஆதனங்களையும் நில அறவை செய்வதற்கு போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் இவற்றின் பெறுமதிகள் மதிப்பிடப்படாதுள்ளது. தற்போது கட்டம் கட்டமாக பெறுமதி மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | கணக்குகளில் சொத்துக்களின் பெறுமதி சரியாக வெளிப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதுடன் குறித்த குறைபாடுகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் ஊழியர் பிணை பேரேட்டு மீதிகளிற்கும் நிதிக்கூற்றிற்கும் இடையில் ரூபா 45,000 வேறுபாடு காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. | பேரேட்டின் படி மீதிக்கும் நிதிக்கூற்றிற்கும் இடையிலான ஊழியர் பிணைப்பண மீதி ரூபா 45,000.00 நாட்குறிப்பின் மூலம் சீர்செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்படும். | ஆவணங்களில் காணப்படும் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதுடன் குறித்த தவறுகள் உரிய ஆவணங்களில் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| காணிகள் | 25,064,545 | உரிமை சான்றுகள் | தற்போது இக்காணிகள் சபைக்கு உருத்துடமையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறித்த விடயம் தொடர்பில் உரிமை சான்றுகள் சமர்ப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் சபையின் நடவடிக்கைகள் தொடர்பான சான்றுகள் சரியாக சபையினால் பராமரிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| - இலக்கம் 371 | சபையினால் வழங்கப்பட்ட 02 வருடங்களிற்கு மேலாக காணப்படும் ரூபா 29,440 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம் - 2017 இற்காக இத்தொகை சபைநிதியில் இருந்து முற்பணமாக வழங்கப்பட்ட போதிலும் இந்நிதி இதுவரை கிடைக்கப்பெறமையினால் சபை நிதியில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 29,440.47 இனை சீராக்கம் செய்வதற்கு கௌரவ ஆளுநர் அவர்களிடம் அனுமதிக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளிற்கமைவாக குறித்த வேலை தொடர்பிலும் வைப்பு தொடர்பிலும் உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,006,641 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,636,549 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **வீதவரி** | | |
| 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 (i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது ஆதன வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் ஆதன பதிவேடுகள் சபைக்கு கையளிக்கப்பட்டதும் ஆதனவரி அறவிடுதல் தொடர்பாக கௌரவ ஆளுநரின் அனுமதியினை பெற்று ஆதனவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி என்பன தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 30,190,552 இனை பயன்படுத்தி அபிவிருத்தித் வேலைகளினை நடை முறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டி ருந்தது. | நாட்டில் ஏற்பட்ட Covid – 19 பெருந்தொற்று நோய் , வளப்பற்றாக்குறை காரணமாக சபையால் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் சபையின் தீர்மானத்திற்கமைய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். | சபை நிதிகளினை விரையமின்றி உத்தமமட்டத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| **பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபையின் அதிகார எல்லைக்குட்பட்டதும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருவதுமான 10 காணி கட்டடங்களிற்கான உடமையானது இன்றுவரை சபைக்கு உடமையாக்கப்படா துள்ளது. | இவற்றின் பெறுமதிகள் 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். மிகுதி 6 காணி கட்டடங்களும் ஆவணங்கள் ( உறுதி, நில அளவைப்படம் ) உள்ளவற்றின் பெறுமதிகள் விரைவில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |